ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



எர்ணாகுளத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் பக்த விஜயம் - ப்ரவசனம்

வேணு : 7 | டிசம்பர் 2001 | கானம் : 5

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registrar of Newspapers for India — Regd. No. TN / CPMG / 156 / 2001

R. No. 62828 / 95 — Licensed to Post without prepayment WPP No. 52

| வேணு : 7 | டிசம்பர் 2001 | கானம் : 5 |
|---|---|---|


## ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி - சிட்னி, ஆஸ்திரேலியா

நவம்பர் 14-ந் தேதி, ஆஸ்திரேலியா, சிட்னியில் ஸ்ரீ வெங்கட்ரமணன் அவர்களுடைய க்ருஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி கொண்டாடப்பட்டது. காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அகண்ட நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.



நவம்பர் 18-ந் தேதி, ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தியை ஒட்டி, காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அகண்ட நாமகீர்த்தனம் ஆஸ்திரேலியா, சிட்னியில் ஸ்ரீ ஸோமசேகர் அவர்களுடைய க்ருஹத்தில் நடைபெற்றது. இதில், 40-க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டார்கள்.


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. ✆ : 4895875 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256 Editor : S. Sridhar

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவம்

## 14-11-2001 (ஐப்பசி ஸ்வாதீ)

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவம் **மதுரபுரி** ஆஶ்ரமத்தில் கொண்டாடப்பட்டது. விடியற்காலையில் பாடசாலை குழந்தைகள் எழுந்து கங்காஸ்நானம் செய்து புத்தாடை உடுத்தி பட்டாசுகளை வெடித்து ஸ்வாமிகளின் ஜயந்தியையும் தீபாவளியையும் கொண்டாடினார்கள். காலையில் ஸ்ரீ ஸ்வாமிகள், மஹாபெரியவாள் பாதுகைக்கும், மாதுரி ஸகீ ஸமேத ப்ரேமிகவரதனுக்கும் திருமஞ்ஜனம் செய்தார்கள். காலை 8 மணி முதல் பல ஊர்களிலிருந்து பக்தர்கள் மதுரபுரிக்கு வந்து ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவத்தில் பங்கேற்றார்கள்.

மலைப்பட்டு, மாஹாண்யம், குண்டுபெரும்பேடு, வல்லாரை, கொளத்தூர், அமரம்பேடு கிராமங்களிலிருந்து 250க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு மதியம் 1 மணி முதல் மாலை 4 மணி வரை, ''ஹரே ராம'' நாமஸங்கீர்த்தனம் செய்தார்கள். அமரம்பேடு பக்தர்கள் திவ்யநாமஸங்கீர்த்தனம் செய்தார்கள். வந்திருந்த அனைவருக்கும் ப்ரஸாதம் விநியோகிக்கப்பட்டது. மாலை 4 மணி முதல் 6 மணி வரை பஜனையும் இரவு 7 மணி முதல் 9 மணி வரை வேத பாராயணமும் இரவு 9½ மணி முதல் 11 மணி வரை திவ்யநாம கீர்த்தனமும் நடைபெற்றன.

---

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜெயந்தி தினத்தன்று உலகெங்கிலும் பல பக்தர்கள் தொலைபேசி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் தொடர்பு கொண்டு தங்கள் நமஸ்காரங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். பல்வேறு கோயில்களில் விசேஷ பூஜைகள் நடத்தப்பட்டு, ப்ரஸாதம் கிடைக்கப் பெற்றது. மேலும், பலர் அவரவர்களுடைய க்ருஹத்திலும், ஸங்கமாகவும் இந்த ஜெயந்தியை கொண்டாடி உள்ளனர். மதுரமுரளியின் மூலமாக பக்தர்கள் அனைவருக்கும் மிஷனின் சார்பில் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம். அனைவருக்கும் பகவானின் அனுக்ரஹம் கிடைப்பதற்கு ப்ரார்த்திப்பதாக ஸ்ரீ ஸ்வாமிகள் தெரிவிக்கச் சொன்னதையும் இதன்மூலம் பக்தர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். - **ஆசிரியர்**

சேலம், பொன்னமாபேட்டை, **ஸ்ரீ க்ருஷ்ணா ஆச்ரமம், குருவாயூரப்பன் கோவிலில்,** ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தியை ஒட்டி ஸ்ரீ குருவாயூரப்பனுக்கு சிறப்பு அபிஷேக அர்ச்சனை, ஆராதனை நடைபெற்றது. சந்தன காப்பு அலங்காரம் செய்யப்பட்டது. பக்தர்களின் ''ஹரே ராம'' நாமகீர்த்தனம் நடைபெற்றது.

**காணிமடம், யோகி ராம்சுரத்குமார் மந்த்ராலயம் டிரஸ்டில்** காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை பக்தர்களால் அகண்ட நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. யோகி ராம்சுரத்குமரர் அவர்களின் பாதுகைகளுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

**சென்னை, ஆலப்பாக்கம் மதுரமுரளிபவனத்தில்,** ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தியை ஒட்டி ஆயுஷ்ய ஹோமம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிகளின் பாதுகைகளுக்கு திருமஞ்ஜனம் நடைபெற்றது.

**பெங்களூர், மல்லேஶ்வரத்தில்** ஸ்ரீ சங்கரன் அவர்களது க்ருஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளுக்காக ஆயுஷ்ய ஹோமம், ஆவஹந்தி ஹோமம், அம்ருத ம்ருத்யுஞ்ஜய ஹோமம் முதலியவை பெங்களூர் பக்தர்களால் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிகளின் பாதுகைகளுக்கு சிறப்பு திருமஞ்ஜனம், அர்ச்சனை பூஜை நடைபெற்றது.

---

ஸனாதனப் புதிர் - பகுதி - 7க்கான வினாக்களுக்கு
சரியான பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்.

**முதல் பரிசு ரூ.** 250/-

C. Krishnaswami, 23, Jambulinga Naicker Street, Chennai - 600 034.

**இரண்டாம் பரிசு ரூ.** 150/-

V. Shyam Sundar, No. 2/24, Agraharam, Paranur, P.O (Via) Mogaiyur.

**மூன்றாம் பரிசு ரூ.** 100/-

V. Sridevi, B-7, Sivasakthi Nagar, 1st Cross Street, Chidambaram - 608 001.

**சிறப்பு பரிசுகள் தலா ரூ.** 100/-

1. K.S. Subramanyan, 16/4, Dr. Ranga Road, Mylapore, Chennai - 600 004.
2. T.K. Swaminathan, 35, Patel Street, Thenpathi, Sirkazhi.
3. V. Srinivasan, B-184, Sivasakthi Nagar, 8th Cross Street, Chidambaram - 1.
4. Smt. Jayanthi Raja, w/o. T.L. Raja, Saravamanya Agraharam, Terizhandur.
5. K. Krithiga, D/o. K. Kumar, C/69, Swarnapuri, Salem - 636 004.
6. V. Kriupakara Sarma, 7/28, Sankar Nagar, Tapovanam - 605 736.
7. S. Saranathan, 10/21, Ranganathan Street, Chrompet, Chennai - 600 044.

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


வேணு : 7 டிசம்பர் 2001 கானம் : 5


## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | விவேக சூடாமணி | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 73 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 7 |
| 4. | வேத கதைகள் - 54 | 9 |
| 5. | இமயத்தின் எளிமையும் இனிமையும் | 12 |
| 6. | எந்தரோ மஹானுபாவுலு - 44 | 15 |
| 7. | ஸனாதனப் புதிர் - பகுதி - 8 | 18 |
| 8. | பக்தனின் கேள்வியும் பட்டரின் பதிலும் | 20 |
| 9. | உவமைக்கோர் கம்பநாட்டாழ்வான் | 22 |
| 10. | உத்தவனுக்கு ஸ்ரீ க்ருஷ்ணனின் உபதேசம் - தொடர்ச்சி | 24 |
| 11. | பாலகர்களுக்கு ஒரு கதை - 48 | 25 |
| 12. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 6 - தொடர்ச்சி | 27 |
| 13. | உலக ஒற்றுமைக்கு வழிவகுக்கும் வேதங்கள் | 29 |
| 14. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 75 | 31 |

ஸ்ரீ ஹரி :

# விவேக சூடாமணி

*ஜந்தூனாம் நரஜன்ம துர்லபமத: பும்ஸ்த்வம்ததோ விப்ரதா*
*தஸ்மாத் வைதிக தர்மமார்கபரதா வித்வத்வம் அஸ்மாத் பரம் ।*
*ஆத்ம அனாத்ம விவேசனம் ஸ்வனுபவோ ப்ரஹ்மாத்மனா ஸம்ஸ்திதி:*
*முக்திர்னோ ஶதகோடிஜன்மஸு க்ருதை: புண்யைர்வினா லப்யதே ॥*

பிறவிகளில் மனிதப்பிறவி சிரமப்பட்டு அடையத்தக்கது. அதிலும், புருஷனாக இருக்கும் தன்மை, அதிலும் ப்ராஹ்மணனாக இருக்கும் தன்மை சிரமப்பட்டு அடையத்தக்கது. இவ்வாறு மனிதனாய், புருஷனாய், ப்ராஹ்மணனாய் பிறவி கிடைப்பது துர்லபமாயிருப்பதால், வேதத்தினால் விதிக்கப்பட்டிருக்கிற ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி தர்மவழியில் ஈடுபடும் தன்மை அவசியம்.

வித்வானாயிருக்கும் தன்மையும், வித்வானாயிருக்கும் தன்மையை ஸம்பாதித்தபின், ஆத்மாவையும், ஆத்மாவல்லாததையும் பிரித்தறிய வேண்டும். ஸாக்ஷாத்கார அனுபவம் நன்கு ஏற்பட வேண்டும். ப்ரஹ்ம ஸ்வரூபமாகவே, நன்கு நிலைத்து விடுவதாகிய மோக்ஷநிலை நூறுகோடி ஜன்மாக்களில் செய்யப்பட்ட புண்ணியங்கள் அன்றி ஸித்திப்பதில்லை.

நான் எந்த சுகங்களையும் தேடுவதில்லை. நான் என் தந்தையின் வேலையை செய்யவே விரும்புகின்றேன். என் வாழ்க்கையினால் ஒரே ஒரு ஜீவன் பலனடைந்தாலும் அது போதுமானது. அதுவே ப்ரயோஜனமானது. மேலும், இந்த சரீரம் இறந்தாலும், எஞ்சியிருக்கும் ஆத்மா என் தந்தையின் வேலையைச் செய்ய மறுபடி பிறக்கட்டும்.

**- யோகி ராம்சுரத்குமார்**

# 73

ஆரம்பத்தில் நமது ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த அன்பர்களுடைய க்ருஹங்களில், யாராவது ஒருவருடைய க்ருஹத்தில் அனைவரும் கூடி ப்ரதி ஞாயிற்றுக்கிழமையும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை மஹாமந்த்ர (ஹரே ராம) நாம ஸங்கீர்த்தனம் செய்து வரச் செய்தார்கள் நமது ஸ்வாமிகள். பிறகு சில வருடங்கள் கழித்து சென்னையைச் சுற்றியுள்ள குடிசைப் பகுதிகளில் எல்லாம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சென்று நாம ஸங்கீர்த்தனம் செய்து வரச் செய்தார்கள். பிறகு சில காலங்களாக ஒவ்வொரு ஊரிலும் நமது ஸத்ஸங்க அன்பர்களின் க்ருஹங்களில் சைதன்ய நாம பிக்ஷா கேந்திரா என்ற அமைப்பை ஏற்படுத்தி அங்கெல்லாம் நாமஸங்கீர்த்தனம் செய்து வரச் செய்துள்ளார்கள். இன்றும், இந்த அமைப்புகள் மூலம், பலர், வெளிநாடுகளிலும் நாம ஸங்கீர்த்தனம் செய்து வருகின்றனர்.

இப்பொழுது நமது ஆஶ்ரமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள ஹரிஜன வீதிகளில் ஆரம்பித்து நாமஸங்கீர்த்தனம் செய்து வரச்செய்துள்ளார்கள். இப்படியாக தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமங்களில் நடைபெற வேண்டும் என்பது நமது ஸ்வாமிகளின் அவா. இந்த வருடம் நமது கோகுலாஷ்டமி ப்ரஹ்மோத்ஸவத்திற்கு வந்தவர்கள், சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்தவர்கள் (சிறு குழந்தைகள் உள்பட) நாம ஸங்கீர்த்தனம் ஆடிப்பாடி செய்ததைக் கண்டு ஆனந்தித்திருப்பார்கள். என்னுடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது ஸ்ரீ ஸ்வாமிகள், இப்பொழுதெல்லாம் எப்பொழுதும் தனக்கு சைதன்யமஹாப்ரபு த்யானமாகவே இருந்து வருவதாகக் கூறினார்கள். மேலும், மஹாப்ரபு வாழ்க்கையிலிருந்து ஒரு ஸம்பவத்தையும் கூறினார்கள்.

''நாற்பத்து எட்டு வயதுகளே வாழ்ந்த மஹாப்ரபு, முதல் இருபத்துநான்கு வருடங்களை நவத்வீபத்திலேயே அகண்டமாக

நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டு கழித்தார். பிறகு பூரி சென்று ஒரு வருடம் தங்கி, மறுபடி அங்கிருந்து பல க்ஷேத்ரங்களுக்கு யாத்ரை சென்று, பூரி வந்து கடைசி பன்னிரண்டு வருடங்களை பூரியிலேயே கழித்தார். அதிலும் கடைசி ஆறு வருடங்களை கம்பீர குகை என்ற ஒரு குகையிலேயே கழித்தார். இங்கு இருந்தபொழுது பல நாட்கள் சரீர ப்ரஜ்ஞையே இல்லாமல் இருந்தார்.

நவத்வீபத்தில் இருக்கும்பொழுது, மஹாப்ரபு ஒரு சிறிய குடிசையிலேயே வாஸம் செய்து வந்தார். அப்பொழுது அங்கு ஸ்ரீவாஸ்பண்டிதர் என்ற ஒரு பெரியவர் வாழ்ந்து வந்தார். நித்யம் அவருடைய க்ருஹத்தில் உள்ள கூடத்தில்தான் ப்ரபு தனது அந்தரங்க பக்தர்களுடன் கதவை தாழிட்டு கொண்டு இரவு முழுவதும் மஹாமந்த்ர கீர்த்தனம் ஆடிப்பாடிக்கொண்டு செய்வார். நடுநடுவே ஏதாவது ஒரு பாகவத ஶ்லோகத்தை மட்டும் எடுத்து ஸுஸ்வரமாக பாடுவார்.

அந்த ஸமயத்தில், அந்த அக்ரஹாரத்தில் இருந்த சில ப்ராஹ்மணர்கள், அந்த ப்ரதேசத்திற்கு அதிகாரியாக பொறுப்பு வகிக்கும் காஜி (உத்தியோகப் பெயர்) என்ற முஸ்லீமிடம், நாமஸங்கீர்த்தனம் செய்வது தங்களுடைய ஹிந்து மதத்திற்கு விரோதமான விஷயம் என்றும், இப்படிச் செய்தால் அரசன் இறந்துவிடுவான் என்றும் மொட்டை கடிதம் எழுதிப் போட்டு விட்டனர். அதைக் கண்ட காஜி, எப்பொழுது சில பேருக்கு நாம கீர்த்தனம் செய்வது பிடிக்கவில்லையோ, அப்பொழுது அதை யாரும் செய்ய வேண்டிய அவச்யமில்லை என்றும், அப்படி மீறி செய்தால் கைது செய்யப்படுவார்கள் என்றும் உத்தரவு போட்டு விட்டான்.


ஸ்ரீவாஸ் பண்டிதருக்கு இதைக் கேட்டவுடன் பயம் வந்து விட்டது. தனது க்ருஹத்தில் தொடர்ந்து நாமஸங்கீர்த்தனம் செய்யத் தயங்கினார். ஆனால், அதே ஸமயத்தில் இந்த விஷயத்தை மஹாப்ரபுவிடம் சொல்வதற்கும் அவருக்கு தயக்கமாகவும் பயமாகவும் இருந்தது. மறுநாள் வழக்கம்போல் மஹாப்ரபு காலையில் பாகவத பாராயணம் செய்துகொண்டிருக்கும்பொழுது நரஸிம்மாவதார கட்டம் வந்தது. அந்த ஸமயத்தில் மஹாப்ரபு தன்

நிலை மறந்தார். அவருடைய உடலில் பகவத் ஆவேசம் ஏற்பட்டது. அதே நிலையில் வந்து ஸ்ரீவாஸ்பண்டிதரின் க்ருஹத்தின் கதவுகளை தட்டினார். கதவை திறந்த ஸ்ரீவாஸ்பண்டிதரோ மஹாப்ரபுவிடம் ந்ருஸிம்ம ப்ரவேசம் ஏற்பட்டுள்ளதைப் புரிந்துகொண்டார். ஸ்ரீவாஸ் பண்டிதரோ ந்ருஸிம்ம பக்தர். மஹாப்ரபு வரும் ஸமயத்தில் அவர், தன்னுடைய உபாஸனா தெய்வமான ந்ருஸிம்ம ஸாளக்ராமத்தை பூஜை செய்ய சித்தமாக இருந்தார். இந்த நிலையில் மஹாப்ரபுவைக் கண்டவுடன் ந்ருஸிம்ம ஸாளக்ராமத்தை எடுத்து சம்படத்தில் வைத்துவிட்டு, அவ்விடத்தில் மஹாப்ரபுவை அமரச் செய்து விதிவத்தாக பூஜை செய்தார்.

பூஜை பூர்த்தியானவுடன் ந்ருஸிம்ம ஆவேசத்தில் இருந்த மஹாப்ரபு ஸ்ரீவாஸ்பண்டிதரைப் பார்த்து, ''எல்லோரும் பயப்படலாம். நீ பயப்படலாமா? ஸ்ரீவாஸா, நான் இந்த உலகத்தில் பண்டிதன், பாமரன், தனிகன், தரித்ரன், பாபி, புண்யவான், உயர்ந்தவன், தாழ்ந்தவன், ப்ராஹ்மணன், சண்டாளன், ஊமை, பசு, பக்ஷி, ம்ருகம் உட்பட ஒவ்வொருவருடைய வாயிலிருந்தும் ஹரிநாமம் வரவழைக்கத்தான் அவதாரம் செய்துள்ளேன். ஒவ்வொருவரையும் கொஞ்சி, கெஞ்சி, அதட்டி, நமஸ்கரித்து, எப்படியாவது ஹரிநாமம் சொல்ல வைப்பேன். அப்படியும் ஒருவன் சொல்லவில்லை என்றாலோ அல்லது நாமஸங்கீர்த்தனம் செய்வதற்கு விக்னம் செய்தாலோ அவர்களை ஹிரண்யகசிபுவை கிழித்துப் போட்டது போல கிழித்து விடுவேன்'' என்றார்.

ஸ்ரீவாஸ்பண்டிதரோ ஆச்சர்யத்துடனும் வினயத்துடனும் இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தார். ''உனக்கு நம்பிக்கை வரவில்லையா? என்னுடன் வா'' என்று அவருடைய கையைப் பிடித்து அழைத்துச் சென்றார். அங்கு ஸ்ரீவாஸ்பண்டிதரின் பேத்தி ஆறு மாதங்களே ஆன குழந்தை நாராயணி தொட்டிலில் படுத்து இருந்தாள். மஹாப்ரபு அவளைப் பார்த்து, ''நாராயணி! நாமம் சொல்'' என்றார். என்ன ஆச்சர்யம்! உடனே அந்தக் குழந்தை 'ஹரே ராம' என்று கீர்த்தனம் செய்ய ஆரம்பித்துவிட்டது. உடனே மஹாப்ரபு மூர்ச்சையாகி கீழே விழுந்துவிட்டார்.

பிறகு, மெதுவாக காஜியின் உத்தரவு அவரிடம் தெரிவிக்கப்பட்டது. மஹாப்ரபு உடனே பல பக்தர்களை அழைத்துக்



கொண்டு அந்த காஜியின் வீட்டு முன்பே சென்று நாமஸங்கீர்த்தனம் செய்தார். காஜியும் தன்னை மறந்து சிறிது நேரம் நாமஸங்கீர்த்தனம் செய்தார். அப்பொழுது அவர் மஹாப்ரபுவிடம், நான் எப்பொழுது நாம ஸங்கீர்த்தனம் செய்யக்கூடாது என்று உத்தரவு போட்டேனோ, அன்றிரவு எனக்கு ஒரு கனவு வந்தது. அதில் ஒரு சிங்கம் என் மார்பு மீது பாய்ந்து கீறுவது போல் தோன்றியது. உடனே எழுந்து பார்த்தால் என்னுடைய மேல் அங்கமெல்லாம் கிழித்திருந்தது. மேலும், மார்புகளில் நகக்கீறல்கள் இருந்தன என்றும் தெரிவித்தான்.

இதையெல்லாம் கூறிய நம் ஸ்வாமிகள், எர்ணாகுளத்திற்குப் போகும்பொழுதும், வரும்பொழுதும் இதே ஸம்பவம் ஞாபகமாகவே இருந்தது என்றும் கூறினார். மேலும், ஸ்ரீ ஸ்வாமிகள் எர்ணாகுளத்திலிருந்து உடுப்பி சென்று திரும்பி வருகையில், பெங்களூர், ஸ்ரீராம்புரத்தில் உள்ள புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நமது பாடசாலையில் இரவு தங்கினார்கள். அன்று இரவு மிகப் பெரிய ஸ்வர்ண காந்தியுடன் கூடிய யோக ந்ருஸிம்மர் தனக்குக் காட்சி கொடுத்தார் என்றும், மேலும் சில விஷயங்களை தன்னிடம் தெரியப்படுத்தினார் என்றும், ஆனால் அவைகளை இப்பொழுது வெளியில் சொல்வதற்கில்லை'' என்றும், ஸ்வாமிகள் கூறினார்கள்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : எனக்கு பகவத் கீதை முழுவதும் மனப்பாடமாக ஒப்புவிக்கத் தெரியும்!*

ஸ்ரீ ஸ்வாமிகள் : தெரிந்தால் நல்லதுதான். இவைகளோடு மட்டும் நீங்கள் திருப்தி அடைந்துவிடக்கூடாது. மனப்பாடமாக தெரிந்ததனால் என்ன பலன் கிடைக்கும்? எங்கேயாவது பகவத்கீதை ஒப்புவிக்கின்ற போட்டி நடந்தால் பரிசு கிடைக்கும் அவ்வளவுதான். கொஞ்சம் கொஞ்சமாக பகவத் கீதையில் உள்ள அர்த்தங்களை தெரிந்துகொண்டு அவைகளை நடைமுறையிலும், கொஞ்சம் கொஞ்சமாக செயல்படுத்த ஆரம்பிக்கவேண்டும்.

***கேள்வி : 'விஸ்ருஜ்ய லஜ்ஜாம் யோதீதே மந்நாமானி நிரந்தரம்' என்று பாகவதோத்தமர்கள் ஸ்லோகம் சொல்கின்றார்களே. இது புராண ஸ்லோகம்தானே! புராண ஸ்லோகத்திலேயே லஜ்ஜையை விட்டுவிட்டு நாம ஸங்கீர்த்தனம் செய்ய வேண்டும் என்று கூறப்படுவதால், அன்றே நாமஸங்கீர்த்தனம் செய்வதற்கு வெட்கப்பட்டவர்கள் உண்டா?***

ஸ்ரீ ஸ்வாமிகள் : யாரும் வெட்கத்தைவிட்டு த்யானம் செய், வெட்கத்தைவிட்டு தர்மத்தை அனுஷ்டானம் செய், வெட்கத்தை விட்டு யோகம் செய், வெட்கத்தைவிட்டு வேதாந்த விசாரம் செய் என்றெல்லாம் சொல்லவில்லை. ஆனால், நாமஸங்கீர்த்தனம் செய்வதற்கு மட்டும் வெட்கத்தை விட்டுவிட்டு செய்யவேண்டும் என்று சொல்வானேன்? பதீதனாகவும், ப்ரஷ்டனாகவும், போனவர்கள் நிச்சயமாக வேறு எந்த மார்க்கத்திற்கும், அதிகாரிகள் இல்லை. ஆனால், அவர்கள் பகவந்நாம கீர்த்தனத்திற்கு அதிகாரிகள். அவர்களை அழைத்து உங்களுக்கும் கதியுள்ளது. நீங்களும் பகவந்நாம கீர்த்தனத்தால் கரையேறலாம். பகவந்நாமம் உங்களையும் பவித்ரமாக்கிவிடும் என்று கூறினாலும், ''எத்தனையோ பாவங்களை செய்த நாம், பவித்ரமான பகவந்நாமாவை சொல்லலாமோ'' என்ற வெட்கமும், தயக்கமும் அவர்களுக்கு ஏற்படாலாம். அந்த தயக்கம்,

வெட்கம் உனக்குத் தேவையில்லை. அந்த வெட்கத்தைவிட்டு தைர்யத்துடனும், ஸந்தோஷத்துடனும் கீர்த்தனம் செய் என்பதுதான் அந்த ஶ்லோகத்தினுடைய **பா**வார்த்தம்.

*கேள்வி : ஞான மார்க்கத்திற்கு ப்ரதானமான அம்சங்கள் யாவை?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஆத்ம தத்வத்தை ஶாஸ்த்ரங்களின் மூலம் கேட்பது ஶ்ரவணமாகும். கேட்டவற்றை சிந்தித்துப் பார்ப்பது மனனம் ஆகும். அதில் திட நிஷ்டையே நிதித்யாஸனம் ஆகும். ஞான மார்க்கத்திற்கு ஶ்ரவண, மனன, நிதித்யாஸனமே முக்யமான அங்கங்கள் ஆகும். இத்தகைய ஞான மார்க்கத்திற்கு 'யாஜ்ஞவல்கியரே' குரு ஆவார்.

***கேள்வி : எனது நண்பர் ஒரு ப்ராஹ்மணர். அவர் பூணூல் அணிவதில்லை. அவரை பார்த்து தாங்கள் ஏன் பூணூல் அணிவதில்லை என்று கேட்டேன். அதற்கு அவரோ, நான் நிறைய மதுபானம் செய்வதுண்டு. மேலும் பல தவறான பழக்கங்கள் என்னிடம் உண்டு. நான் பூணூல் அணிந்து இவைகளை எல்லாம் செய்தால் அவமானம். ஆகையால் அதை கழற்றிவிட்டேன் என்று கூறினார். இன்று இது மாதிரி பல ப்ராஹ்மணர்கள் தவறு செய்வதால் கலப்பு திருமணத்தை ஊக்குவித்து ப்ராஹ்மண ஜாதியே இல்லாமல் செய்து விடலாம் என்று தோன்றுகிறது. தனியாக இப்படி ஒரு ஜாதி இருந்து கொண்டு இப்படி தவறு செய்வதை காட்டிலும், இந்த ஜாதியே அழிந்து விடுவது நல்லது என்று தோன்றுகின்றது.***

ஸ்ரீ ஸ்வாமிகள் : நீங்கள் சொல்கின்றபடியே வைத்துக் கொண்டாலும்கூட, பிறகு என்னவாகும் என்று பார்ப்போம். ஜாதிகளே அழிந்துவிடுவதாக வைத்து கொள்வோம். பிறகு தமிழ் பேசுகின்ற தமிழ்நாட்டை சேர்ந்த நம்மவர்களில் பலர் தவறு செய்கின்றதை பார்க்கும்பொழுது உங்களுக்கு வருத்தம் ஏற்படும். அதற்காக தமிழ் இனம் என்ற இனமே இருக்க கூடாது என்பீர். பிறகு இப்படியாக போனால் இந்தியாவே இருக்க கூடாது என்பீர். பிறகு மனித இனமே தேவையில்லை என்பீர். ஆகவே இதற்கு முடிவுதான் ஏது? காலம் தான் எல்லாவற்றிற்கும் முடிவு தரவேண்டும்.

# வேத கதைகள் - 54

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## ''பாலச்சதர்கள்''

ஒரு ஸமயம், விதேஹ தேசத்து அரசன் அதிகமான தக்ஷிணை அளித்து ஒரு யாகம் செய்தான். அதில் கலந்துகொள்வதற்காக குருதேசத்திலிருந்தும் பாஞ்சாலதேசத்திலிருந்தும் ப்ராஹ்மணர்கள் கூட்டம் கூட்டமாகக் கலந்து கொண்டனர். இவர்களைப் பார்த்தவுடன் அரசனுக்கு ஒரு ஆசை ஏற்பட்டது. இவர்களுக்குள் அதிக அறிவு உள்ளவர் யார்? என்று தெரிந்துகொள்ள விரும்பினான். உடனே ஆயிரம் பசுக்களை ஸபையில் நிறுத்தினான். ஒவ்வொரு மாட்டின் கொம்பிலும் 2½ பலம் தங்கங்கள் கட்டப்பட்டன. ஒவ்வொரு மாட்டிலும் 10 பலம் தங்கங்கள் இருந்தன. உடன் ப்ராஹ்மணர்களை அழைத்து, ''ஓ ப்ராஹ்மணர்களே! உங்களுக்கு நமஸ்காரம். உங்களுக்குள் எவர் உயர்ந்த ப்ரஹ்ம ஞானியோ அவர் இந்த மாடுகளை ஓட்டிச் செல்லலாம்'' என்று வேண்டினான். இதைக் கேட்டு ஒருவருக்காவது ஓட்டிச் செல்ல தைரியம் இல்லை. அப்போது யாஜ்ஞவல்க்யர் தன்னிடம் ஸாமவேதம் அத்யயனம் செய்யும் சீடனைப் பார்த்து ''ஓ! ஸாமஶ்ரவனே ! இந்த மாடுகளை நம் வீட்டிற்கு ஓட்டிச் செல்வாயாக'' என்று சொன்னார்.

யாஜ்ஞவல்க்யர் 4 வேதங்களையும் அத்யயனம் செய்தவர். இதைப்பார்த்து ப்ராஹ்மணர்கள் கோபமுற்றனர். யாக்ஞவல்கியர் நீர் ஒருவர்தான் உயர்ந்த ப்ரஹ்மஞானியா? என்று அதட்டினர். உடன், ''உயர்ந்த ப்ராஹ்மணர்களை நான் வணங்குகிறேன். எனக்கு பசுக்கள் தேவைப்படுகின்றது. அதனால் என் வீட்டிற்கு ஓட்டிச் செல்ல உத்தரவிட்டேன்'' என்று பணிவுடன் கூறினார். அப்போது பல மஹர்ஷிகள் யாஜ்ஞவல்க்யருடன் வாதம் புரிந்தனர்.

அதில் லஹ்யரின் பிள்ளை லாஹ்யாயணி என்கிற புஜ்ஜு என்பவர், யாஜ்ஞவல்க்யரிடம் வாதம் புரிந்தார். ஓ யாஜ்ஞவல்க்யரே,!

நாங்கள் ஒரு ஸமயம் மத்ரதேசத்தில் அத்யயனம் செய்யவோ அல்லது அங்கு நடந்த யாகத்தில் ருத்விக்குகளாகவோ சென்றோம். அங்கு கபி கோத்ரத்தில் பிறந்த பதஞ்ஜலர் என்பவரின் வீட்டிற்குச் சென்றோம். அவருடைய பெண் ஒரு கந்தர்வனால் பீடிக்கப்பட்டு இருந்தாள். அவனை நீ யார்? என்று நாங்கள் கேட்டோம். அவன் ''அங்கிரஸ் கோத்ரத்தில் பிறந்தவன். சுதன்வா என்பது என் பெயர்'' என்றான்.

அவனைப் பார்த்து, அண்டகோசத்தில் அளவை அறியும் ஆராய்ச்சியில் ஈடுபட்ட நாங்கள், ''பாலக்ஷிதர்கள் எங்கு செல்கிறார்கள்?'' என்று கேட்டோம். அவனும் எங்களுக்கு எல்லா விவரங்களையும் விரிவாகக் கூறினான். இவ்விதம் மனிதர்களால் அறியமுடியாத உயர்ந்த விஷயத்தை, நாங்கள் கந்தர்வன் வாயிலாக அறிந்துகொண்டு உள்ளோம். பாலக்ஷிதர்கள் என்றால் யார்? அவர்கள் எங்கு செல்கிறார்கள்? இந்த விவரம் உனக்குத் தெரியுமா? என்று யாஜ்ஞவல்க்யரை வினவினார்கள்.

உடனே யாஜ்ஞவல்க்யரும் அச்வமேதயாகம் செய்பவர்கள் எங்கு செல்கிறார்களோ அங்குதான் பாலக்ஷிதர்களும் செல்கின்றனர் என்று பதிலளித்தார். பாலக்ஷிதர்கள் என்பது யாருக்கும் தெரியாத ஒரு சப்தம். இதைக் கேட்டு யாஜ்ஞவல்க்யர் அறியாமல் ஶ்ரமப்படுவார் என்று புஜ்ஜு எண்ணினார். யாஜ்ஞவல்க்யரால் அறியப்படாத விஷயமே கிடையாது. எது தன்னைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது என்று எண்ணினாரோ அதையும் யாஜ்ஞவல்க்யர் அறிந்துள்ளார்.

பாலக்ஷிதர்கள் என்றால் அச்வமேதயாகம் செய்தவர்கள் என்பது பொருள். சூரியனின் ரதம் ஒரு பகலில் எவ்வளவு தூரம் செல்கிறதோ அதைக் காட்டிலும் 32 மடங்கு இந்த பூமி விரிந்துள்ளது. அதற்கு அப்பால் லோகாலோக பர்வதம் என்ற ஒரு மலை உள்ளது. அதற்கு அப்பால் சூரிய ரதம் கூட செல்ல முடியாது. அதனால் அந்தப் பக்கம் எப்பொழுதும் இருளாகவே இருக்கும். இதற்கு இரண்டு மடங்கு ஜலபாகம் உள்ளது. இதுதான் அண்ட கோசத்தின் அளவு. அந்த அண்ட கோசத்திற்கு மேல்தான் விராட்புருஷன் விளங்குகிறான். அச்வமேதயாகம் செய்தவர்கள் அவரைத்தான் அடைகிறார்கள்.

அந்த அண்டகோசத்திலிருந்து விராட்புருஷனை அடைவதற்கு ஒரு ஊசி குத்தினால் எவ்வளவு இடம் கிடைக்குமோ அந்த இடைவெளிதான் உள்ளது. அதற்குள் உருவத்துடன் ஒருவரும் செல்ல முடியாது.

அச்வமேதயாகம் செய்தவர்களை வாயு பகவான், காற்றாக ஆக்கி, அந்த ஓட்டை வழியாக விராட்புருஷனை அடைவிக்கிறான். இவ்விதம் காற்றானது அத்யாத்மத்தில் ப்ராணனாகவும், அதிபூதத்தில் வாயுவாகவும் அதிதைவத்தில் விராட்புருஷனாகவும் விளங்குகிறார். வாயுவின் அருள் இல்லாவிடில் விராட் புருஷனை அடைய முடியாது. யாகம் செய்வதும் வாயுவின் செயல்தான். யாகத்தை செய்பவனும் வாயுதான். செல்வதற்கு உடன் பிராணனாக இருந்து சக்தி அளிப்பவனும் வாயுதான். ஓட்டை வழியாக, அச்வமேதயாகம் செய்தவர்களை வெளியேறச் செய்கிறான். அதனால் வாயுதான் உயர்ந்தவன்'' என்று யாஜ்ஞவல்க்யர் பதில் கூறினார். இதைக் கேட்டு அகங்காரம் அடங்கி புஜ்ஜு தன் வாதத்தை முடித்துக்கொண்டார்.

# செய்திகள்

### நவம்பர் 8-ந் தேதி முதல் நவம்பர் 14-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு அகண்ட, ''ஹரே ராம'' நாமகீர்த்தனம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற்றது.

### நவம்பர் 26-ந் தேதி

சீர்காழி வட்டம், திருநாங்கூர் தொகுப்பு, திருப்பார்த்தன்பள்ளி ஸ்ரீ பார்த்தசாரிதி பெருமாள் கோவிலுக்கு உட்பட்ட திருக்காட்டுப்பள்ளி ஸ்ரீ கோலவில்லிராமர் ஸந்நதி ஜீர்ணோத்தாரண மஹாஸம்ப்ரோக்ஷணம் ஸ்ரீ ஸ்வாமிகளின் முன்னிலையில் நடைபெற்றது.

# இமயத்தின் எளிமையும் இனிமையும்

**– ஆ. பாக்யநாதன்**

திருவண்ணாமலையில், ஸமீப காலம்வரை வாழ்ந்து, தன்னை அண்டியவர்களையெல்லாம் அருள்மழையில் நனையச் செய்த, பக்தர்களால் 'யோகிராம்சுரத்குமார்' என்று அழைக்கப்பட்ட தெய்வக் குழந்தையின் ஜெயந்தி, டிசம்பர் மாதம் 1-ஆம் தேதி அவரது பக்தர்களால் உலகம் முழுதும் பரவலாக கொண்டாடப்படுகிறது. இத்தருணத்தில், அவரைப் பற்றி நாமும் நமக்குத் தெரிந்த ஓரிரு விஷயங்களை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வோம்.

நம்முடைய ஸத்ஸங்கத்தில் அடிக்கடி கலந்துகொள்ளும் பிரபல எழுத்தாளர் பாலகுமாரன் அவர்கள் இந்த தெய்வக் குழந்தையிடம் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது முதல் அடிக்கடி அவரை தரிசனம் செய்ய திருவண்ணாமலை செல்வதுண்டு. இப்படியாக, பகவான் திருவண்ணாமலை ஸன்னதி தெருவில் இருந்தபொழுது, பாலகுமாரன் அவரை தரிசனம் செய்யச் சென்றார். அப்பொழுது அடக்கமாட்டாத ஆர்வத்துடன் தன்னுடைய குருநாதராகிய பகவானை நோக்கி ஆங்கிலத்தில், "Bhagavan! Will you perform any miracle?" என்று கேட்டார். உடனே பகவான் சிரித்துக் கொண்டே, அருகிலிருந்த தனது அணுக்கத் தொண்டராகிய பெருமாளை நோக்கி, "Perumal! Balakumar has asked me such a question. You answer!" என்றார்.

உடனே பெருமாள், பகவான் செய்த வியக்கத்தக்க அதிசயங்களை வரிசையாக சொல்லிக்கொண்டே போக, கண்களில் கண்ணீர் ததும்ப கேட்ட பாலகுமாரன், பகவானை நமஸ்கரித்து, "Bhagavan, you are so great! You are capable of such miracles!" என்று ஆச்சரியத்துடன் மேனி சிலிர்த்து சொன்னார். இவ்விடத்தில்தான் பகவான் கூறிய பதில் அவருடைய வினயத்தை நமக்குக் காட்டுகிறது. பாலகுமாரன் சொல்லி முடிப்பதற்கு முன்பே இடைமறித்த பகவான், "Balakumar! You are wrong. This beggar is not capable of doing any miracle. Only Ram Naam is doing miracles!" என்று கூறினார்.

எவ்வளவு ஒரு ஆழமான கருத்து! எத்தகைய எளிமையின் வெளிப்பாடு! இந்த பதிலை அவரைத் தவிர யாரால் சொல்லியிருக்க முடியும்?. மேலும், இதைத் தொடர்ந்து '"Entire cosmic is a miracle! Everybody's body is a miracle! And everybody's life is a miracle! Other than this, what miracle do you want?" என்றார். மேலோட்டமாகப் பார்த்தால், இவை சாதாரண கருத்துகள் போலிருந்தாலும், பலமுறை இவைகளை சிந்தித்துப் பார்த்தபொழுது இந்த வரிகளில் எத்தனையோ ஆழ்ந்த கருத்துகள் பொதிந்திருப்பதை நான் உணர்கிறேன்.

பகவானுடைய பக்தர் திரு. வெங்கட்ராமன் என்பவருக்கு ஒரு ஸமயம், வளைகுடா நாடு ஒன்றிலிருந்து வேலைக்கான உத்தரவு வந்தது. அவர் தன்னுடைய குருநாதரான பகவான் யோகிராம்சுரத்குமாரை தரிசித்து அந்த வேலையில் சேர்வதற்கு ஆசி பெறச் சென்றார். பகவான், வளைகுடாவில் அந்த நாடு எங்கிருக்கிறது என்பதை விசாரித்துக்கொண்டே ஏதோ தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்து விட்டார். மீண்டும் அந்த பக்தரை நோக்கி, ''வெங்கட்ராமன்! நீ சொல்லும் நாடு எங்கிருக்கிறது என்று இந்த பிச்சைக்காரனுக்குப் புலப்படவில்லை. கடைக்குச் சென்று அட்லாஸ் வாங்கிவா!'' என்றார்.

அவர் அட்லாஸ் வாங்கி வந்தவுடன், ''எனக்கு அந்த நாட்டைக் காண்பி!'' என்றார். வெங்கட்ராமன் அந்த நாட்டை அட்லாஸில் காண்பித்தவுடன், பகவான் தனது விரலால் அதைத் தொட்டவாறே மௌனத்தில் ஆழ்ந்தார். பின்னர், "This beggar has no right to prevent you from going there" என்று கூறி, அங்கு சென்றபின் கடிதம் எழுதுமாறு பணித்தார். வேலையில் சேர்ந்தபின் வெங்கட்ராமன் பகவானுக்குக் கடிதம் எழுதினார்.

வெங்கட்ராமனுடைய உறவினரான ஸ்வாமிநாதன் அப்பொழுது பகவானுடன் இருந்தார். பகவான் அவரை அந்தக் கடிதத்தைப் படிக்குமாறு கூறினார். அந்த கடிதத்தில் வெங்கட்ராமன், தனக்கு திருவண்ணாமலையைச் சேர்ந்த குருமூர்த்தி பெரிதும் உதவி வருவதாகவும், அவரது பெற்றோர் திருவண்ணாமலையில் இருப்பதாகவும், பகவானே அனுப்பி வைத்தது போல், குருமூர்த்தி தனக்கு உதவி வருவதாகவும் எழுதியிருந்தார்.

அதைக்கேட்ட பகவான் ஸ்வாமிநாதனிடம், ‘‘குருமூர்த்தியின் க்ருஹம் எங்கிருக்கிறது?’’ என்று கேட்க, ஸ்வாமிநாதன் அங்கிருந்து சிறிது தொலைவில் இருப்பதாகக் கூறினார். உடனே பகவான், ‘‘நாம் அங்கு செல்வோம்!’’ என்று கூறினார். ஸ்வாமிநாதன் பகவானிடம், ‘‘பகவான்! அவர்கள் இதுவரை தங்களை தரிசிக்க வந்ததில்லை. எனவே நாம் அங்கு சென்றால் வரவேற்பு எவ்வாறிருக்கும் என்று கூற முடியாது’’ என்றார். பகவான் அதற்கு, "Does not matter, Let us go" என்றார்.

பகவானும், ஸ்வாமிநாதனும், குருமூர்த்தியின் பெற்றோரின் க்ருஹத்திற்குச் சென்றனர். பகவானைக் கண்டு குருமூர்த்தியின் பெற்றோர் வியப்படைந்தனர். பகவான் தனது விசிறியால் விசிறிக் கொண்டே, ‘‘ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய்ஜெய்ராம்!’’ என்று பாடியவாறே ‘‘உங்கள் மகன், எனது குழந்தை வெங்கட்ராமனுக்கு மிகவும் உதவியாக இருக்கிறார். ஆகவே இந்த வீட்டை ஆசீர்வதிக்க வேண்டியது எனது கடமை’’ என்று கூறி அந்த வீடு முழுவதும் நடந்து ஆசீர்வதித்தார். இந்த ஸம்பவம் பகவான் யோகி ராம்சுரத்குமாரின் எல்லையற்ற கருணையைக் காட்டுகிறது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### டிசம்பர் - 16ந் தேதி முதல்

சென்னை ப்ரேமிகபவனத்தில் தனுர்மாத பூஜை ஆரம்பம். தனுர்மாத 30 நாட்களும் காலையில் பெருமாளுக்கு விசேஷ பூஜை நடைபெறும்.

### ஜனவரி - 2ந் தேதி முதல் 10ந் தேதி வரை

சென்னை தி.நகர் தக்ஷிண பாரத ஹிந்தி ப்ரசார சபாவில், க்ஷிப்ர ப்ரஸாத கணபதி ட்ரஸ்ட் சார்பில் ஸ்ரீ ஸ்வாமிகள், இரவு 7 மணி முதல் 9 மணி வரை ‘‘பக்த விஜயம்’’ பற்றி உபன்யாஸம் செய்கின்றார்கள்.

# எந்தரோ மஹானுபாவுலு - 44

ஹரிதாஸருக்கு அத்வைதாச்சார்யார்தான் குருவாக, பிதாவாக ஆஸ்ரயிப்பவராக, ஸர்வமும் ஆகத் திகழ்ந்தார். ஹரிதாஸருக்கு அபார குருபக்தி இருந்தது. நவத்வீபத்தில் மஹாப்ரபுவின் அவதாரம் என்று ஏற்பட்டதோ அன்று அத்வைதாசார்யர் ஆனந்த நடமாடி கீர்த்தனம் செய்தபோது ஹரிதாஸரும் அவருடன் க்ருஷ்ணகீர்த்தனம் செய்தார். சிறிது காலம் கழித்து, கௌராங்கர் ஜனங்களை உத்தாரணம் செய்து க்ருஷ்ண நாம ஸங்கீர்த்தனத்தை ப்ரசாரம் செய்வார் என்று அத்வைதாசார்யர் கூறியதும், ஹரிதாஸரும் அதை பூர்ண விஸ்வாஸத்துடன் ஏற்றுக்கொண்டு கௌராங்கர் ப்ரகாசமாகும் தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டே க்ருஷ்ண ஸங்கீர்த்தனம் செய்துகொண்டு காலத்தைக் கழித்து வந்தார்.

அந்த ஸமயத்தில் ஸப்தக்ராமத்தில் ஹிரண்யன், கோவர்த்தன் என்று இரு சகோதரர்கள் ஜமீன்தார்களாக இருந்தனர். அவர்களுக்கு பரம வைஷ்ணவரும், ஶாஸ்த்ர பண்டிதருமான பலராம ஆசார்யர் குலபுரோகிதராக இருந்தார். பலராம ஆசார்யருக்கு வைஷ்ணவரான அத்வைதாசார்யரிடம் மிகுந்த மதிப்பு இருந்தது. ஹரிதாஸரும் அடிக்கடி தனது புலியா கிராமத்திலிருந்து ஸப்தக்ராமத்துக்கு வந்து பலராம பண்டிதரின் க்ருஹத்தில் தங்கி நாம ஸங்கீர்த்தனம் செய்வார். பலராம ஆசார்யர் ஹரிதாஸரின் பகவத் பக்தியையும், நாம நிஷ்டையையும் கண்டு மிகவும் ப்ரஸன்னமாகி அவரைத் தன் புதல்வனைப் போல் ப்ரேமையுடன் நடத்துவார். கோவர்தன ஜமீன்தாரின் புத்திரரான ரகுநாததாஸ் பாடம் படிக்க பலராம ஆசார்யர் வீட்டுக்கு வரும்போது, ஹரிதாஸர் ஸதா நாம ஜபம் செய்வதைக் கண்டு அவரிடம் மிகவும் ஈடுபாடுகொண்டார்.

ஒருநாள் பலராம ஆசார்யர் ஹரிதாஸருடன் ஜமீன்தார் வீட்டு சபைக்குச் சென்றார். ஜமீன்தார் ஸகோதரர்கள் தங்களது ஆசார்யரை வணங்கிவிட்டு ஹரிதாஸருக்கும் வந்தனம் செய்து அவருக்கும் அமர்வதற்கு ஆசனமளித்தனர். ஹரிதாஸர் உரத்த குரலில்

*''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥''*

என்ற மஹாமந்த்ரத்தை ஜபம் செய்துகொண்டே இருந்தார்.

அனைவரும் ஆச்சர்யத்துடன் அவரையே கண்காணிக்கத் தொடங்கினர். நிரந்தரமாக நாமஜபம் செய்யும் ஹரிதாஸரிடம் ஜமீந்தார்களுக்கு ஸ்வபாவமாக பக்தி ஏற்பட்டது. அந்த ஸபையில் அனேக பண்டிதர்கள் ஸத்சங்கம் நடத்தலானார்கள். பகவன்நாமத்தைப்பற்றி பேச்சு வந்ததும் பண்டிதர்கள் வினயத்துடன் கேட்டனர். ‘‘பகவன்நாமத்தின் கடைசிப் பலன்தான் என்ன? இதனால் என்ன ஸுகம் கிடைக்கிறது? ஹரி நாமத்தினாலேயே எல்லா துக்கங்களும் அடியோடு அழிந்துவிடுமா என்ன? கேவலம் நாம ஜபத்தாலேயே மோக்ஷம் கிடைக்குமா என்ன?’’ என்று வினாக்களை எழுப்பினார்கள்.

அப்பொழுது ஹரிதாஸர், மிக வினயத்துடன் கூப்பிய கரங்களுடன் பண்டிதர்களிடம் பேசலுற்றார். ‘மஹானுபாவர்களே! நீங்கள் அனைவரும் ஶாஸ்த்ரம் அறிந்தவர்கள், தர்மத்தின் மர்மங்களைத் தெரிந்தவர்கள். அனைத்து வைஷ்ணவ ஶாஸ்த்ர க்ரந்தங்களைப் படித்தவர்கள். உங்களிடம் நான் என்ன பேசுவது? இருந்தும் பகவன்நாம மாஹாத்மியத்தால், ஆத்மஸுகம் ஏற்படுகிறதே, அந்த தைரியத்தில் நான் பேசத் துணிகிறேன். பகவன் நாமத்தின் ஸர்வஶ்ரேஷ்ட பலன் என்னவென்றால் நாம ஜபத்தால் ஹ்ருதயத்தில் அபூர்வமான ப்ரஸன்னம் ஏற்படும். அந்த ப்ரஸன்னத்தின் ஸுகத்தை மீண்டும் மீண்டும் அனுபவிக்க, மீண்டும் மீண்டும் ஜபம் செய்து கொண்டே இருப்பதுதான் மிகப் பெரிய பலன். பகவன்நாம ஜபம் செய்பவனுக்கு, துக்கங்கள் அழியவேண்டும் என்றோ, மோக்ஷம் கிடைக்க வேண்டுமென்றோ ஆசைகள் தோன்றாது. அவனது அந்திம த்யேயம் பகவன்நாம ஜபம்தான். எப்படி இருந்தாலும் எங்கு இருந்தாலும், எந்த நிலையிலும் நிரந்தரமாக பகவன்நாம ஸ்மரணத்தில் இருப்பான். க்ஷணமும் நாமத்திலிருந்து விலகமாட்டான். இதுதான் நாம ஜபத்தின் அந்திம லக்ஷ்யம். நாமஜப ஸாதகனுக்கு ஸாதனமும் ஸாத்யமும் பகவானின் நாமம் தான். எனக்கு இவ்வளவுதான் தெரியும். இதற்கு மேல் உங்களுக்கு என்ன தெரியுமோ அதை எனக்குச் சொல்லுங்கள்’’ என்றார்.

மதுரமான, ஸாரமான இந்த வார்த்தைகளைக் கேட்டு ஸபையில் அனைவரும் ஆனந்தம் அடைந்தனர். அந்த சபையில் கோபால் சந்த்ர சக்ரவர்த்தி என்று ஒரு தர்க்கவாதி இருந்தான். அவன் ஹரிதாஸின் பேச்சைக் கண்டனம் செய்யும் விதத்தில்

''இவையெல்லாம் உணர்ச்சி பூர்வமான பேச்சுக்கள். எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்தான் இப்படி உரக்க நாம ஜபத்தைக் கூறிக் கொண்டு திரிவார்கள். யதார்த்த ஞானம் ஶாஸ்த்ர அறிவால்தான் வரும். துக்கங்கள் எல்லாம் நாம ஜபத்தால் எப்படிப்போகும்? ஶாஸ்த்ரங்களில் ஆங்காங்கு நாம மஹிமையைப் பற்றி உயர்த்திச் சொல்வதெல்லாம் வெறும் அர்த்தவாதம் தான்'' என்று கூறினான்.

ஹரிதாஸரும் உடனே உணர்ச்சி பூர்வமாக, ''பகவான்நாம மஹிமையை அர்த்தவாதம் என்று சொல்பவன் வறட்டு தர்க்கவாதி, பகவான்நாமத்தின் மஹிமை தெரியாமல் அதைப் பற்றி அர்த்தவாதம் என்று கூறுவது பாவம்'' என்று சொன்னார்.

கோபால்சந்திர சக்ரவர்த்தியும் விடாமல், ''இவையெல்லாம் மூர்க்கர்களின் பேச்சு. அஜாமிளனைப் போன்ற பாபி, நாராயண நாமத்தை அந்திமதசையில் சொன்ன உடனேயே புனிதனாகி விட்டான் என்றால் நம்ப முடியுமா? அணுவுக்கு அணுவாயிருக்கும் பகவானுக்கு அஜாமிளன் தன் புத்ரனைத்தான் அழைத்தான் என்றும், பகவான் நாமத்தை பக்தியுடன் கூறவில்லை என்றும் தெரியாதா என்ன? இங்கு இது அர்த்தவாதம் இல்லையா என்ன? என்று கேள்விகளைத் தொடுத்தான்.

ஹரிதாஸர் சொன்னார், ''இப்படிச் சொல்பவன் தான் அர்த்தவாதி. இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.'' கோபால சக்ரவர்த்தியும் ஆக்ரோஷமாக ''பகவான் நாமஸ்மரணத்தால் மனிதனின் நீசத்தனம் நீங்கும் என்றால் நான் என் மூக்கை அறுத்துக்கொள்கிறேன்'' என்றான்.

ஹரிதாஸரும் ''பகவன்நாம ஜபத்தால் நீசத்தனம் வேரோடு அழியாவிட்டால் நான் எனது காது, மூக்கு இரண்டையுமே அறுத்துக் கொள்ளத் தயார்'' எனறார். விஷயம் இப்படி பெரிதாக முற்றிவிட மற்றவர்கள் இருவரையும் ஸமாதானம் செய்து அமரச் சொல்லி ஸபையைக் கலைத்தனர். ஜமீன்தாருக்கு கோபாலசக்ரவர்த்தியிடம் மிகவும் அதிருப்தியும் கோபமும் ஏற்பட்டது. வைஷ்ணவ அபராதியான அவனை அவர்கள் வேலையிலிருந்து நீக்கிவிட்டனர். சிறிது காலம் கழிந்ததும் அவனது மூக்கு உண்மையிலேயே அறுபட்டது.

(தொடரும்)

# ஸநாதனப் புதிர் - 8

1. மஹாபாரதப் போரில் சல்லியனைக் கொன்றது யார்?
2. யுதிஷ்டிரரின் மற்றொரு மனைவி பெயர் - பிள்ளையின் பெயர் என்ன?
3. கர்ணனின் பிள்ளையின் பெயர் என்ன? போரில் கர்ணனின் பிள்ளையின் கொன்றது யார்?
4. சகுனியின் ஒரு பிள்ளை மஹாபாரதப் போருக்குப் பிறகும் காந்தார நாட்டை ஆண்டு வந்தான். அவன் எப்பொழுது அர்ஜுனனால் தோற்கடிக்கப்பட்டான்?
5. க்ருஷ்ணர், ருக்மிணியின் பெண் பெயர் என்ன? அவள் யாரை மணந்தாள்?
6. 13-வது நாள் மஹாபாரதப் போரில் அபிமன்யுவைச் சுற்றி போர் தொடுத்த ஆறு மஹாரதர்கள் யார் யார்?
7. ஜனமேஜயனுடைய பிள்ளை, பேரப்பிள்ளை பெயர் என்ன?
8. பப்ருவாஹனன் யார்? அவனது தாய், தந்தையர் யார்? அவன் எந்த நாட்டு இளவரசன்?
9. விருகோதரன் என்பவர் யார்?
10. பூரிஸ்ரவஸ் யார்? அவன் யாரால் கொல்லப்பட்டான்?
11. சிசுபாலனுடைய பிள்ளையின் பெயர் என்ன? சிசுபாலனுடைய பெண்ணை யார் மணந்தார்?
12. ராஜா ஜனமேஜயனின் மனைவியின் பெயர் என்ன?
13. வியாசரால் இயற்றப்பட்ட மஹாபாரதம் முதன் முதலில் யாரால் யாருக்கு சொல்லப்பட்டது?
14. சிந்துராஜன், சைந்தவன் என்று அழைக்கப்பட்ட அரசன் யார்? அவனுக்கும் துரியோதனனுக்கும் என்ன சம்பந்தம்?

ஸனாதனப் புதிர் பகுதி - 8க்கான பதில்களை
டிசம்பர் 25-ந் தேதிக்குள் அனுப்பவேண்டும்.

## ஸநாதனப்புதிர் பகுதி-7க்கான பதில்கள்

1. பானுமதி, லக்ஷ்மணன் - அபிமன்யுவால் கொல்லப்பட்டான்.
2. லக்ஷ்மணா - பரமாத்மா க்ருஷ்ணனின் பிள்ளையான 'சாம்பனை' - ஜாம்பவதிக்கும் க்ருஷ்ணனுக்கும் பிறந்த குழந்தை -
3. லோபாமுத்ரா - விதர்ப்பநாட்டு இளவரசி - ததாஸ்யு (Dadhasyu)
4. பாண்டவர்களுக்காக - அஸ்வத்தாமாவால் கொல்லப்பட்டான்.
5. சக்தி - அதச்யந்தி - வசிஷ்டர் -
6. மஹாபாரதப் போருக்குப் பிறகு 36 வருடங்கள் கழித்து - உதவியது யுயுத்ஸு.
7. ஶ்ருங்கி - சமீகர்
8. ஜனமேஜயன்
9. ப்ரத்யும்னன் - மாயாவதி - அனிருத்தன்.
10. உபரிசரன் - அத்ரிகா - தசராஜன்
    பராசரர் - சாந்தனு -
    வியாசர் - சித்ராங்கதன், விசித்ரவீர்யன்.
11. சகாதேவன் - பதினெட்டாம் நாள் போர் அன்று -
12. ச்ருதசேனன் - சகாதேவனின் பிள்ளை
    ச்ருதகீர்த்தி - அர்ஜுனன் பிள்ளை
    ச்ருதகர்மா - நகுலன் பிள்ளை
    ப்ரதிவிந்த்யன் - தர்மபுத்ரர் பிள்ளை
    சத்சோமன் - பீமன் பிள்ளை
13. தேவவ்ரதன் - சாந்தனு - கங்கா -
14. கடோத்கஜன் - கர்ணன் இந்திரன் கொடுத்த 'சக்தி' ஆயுதத்தால் கொன்றான்.

# பக்தனின் கேள்வியும், பட்டரின் பதிலும்

ஒரு ஸமயம், பராசர பட்டரிடம் ஒருவர் வந்து, நித்யம் ஒரு ப்ராஹ்மணனான க்ருஹஸ்தன் செய்ய வேண்டிய கர்மானுஷ்டங்கள் என்ன என்னவென்று தனக்கு உபதேசிக்கும்படி கேட்டார். அதற்கு பராசர பட்டரும் மிகவும் கருணையுடன் காலை ப்ரஹ்ம முகூர்த்தத்தில் துயில் எழுந்ததிலிருந்து இரவு நித்ரை வரை, செய்ய வேண்டிய கர்மானுஷ்டானங்களை உபதேசித்தார். அவனும் அவைகளை எல்லாம் சிரத்தையுடன் கேட்டு, வினயமுடன் குறிப்புகளும் எடுத்துக்கொண்டான். அவர் உபதேசித்தபடி அவன் நடக்க ஆசைப்பட்டு மறுநாள் முதல் அவைகளை எல்லாம் அனுஷ்டிக்க ஆரம்பித்தான்.


சில நாட்கள் தொடர்ந்து அனுஷ்டானம் செய்து வந்த அவனுக்கு மிகவும் அசதியாகிவிட்டது. போதும் போதும் என்று ஆகிவிட்டது. இவைகளை எல்லாம் எப்படி ஒருவரால் வாழ்நாள் முழுவதும் அனுஷ்டிக்க முடியும் என்று வியப்பாக இருந்தது. நமக்கு உபதேசம் செய்தாரே அந்த பெரியவர் இதையெல்லாம் அனுஷ்டித்து வருகின்றாரா, என்பதை அறிந்து கொள்ள அவனுக்கு ஆவல் ஏற்பட்டது. அவருடைய க்ருஹத்திற்குச் சென்று அங்கு ஒருநாள் தங்கி அவர் என்ன செய்கின்றார் என்பதைப் பார்க்க ஆவல் கொண்டு அவருடைய க்ருஹத்தில் அவருக்குத் தெரியாமல் சென்று தங்கினான்.

பராசரரோ காலை எழுந்து ஸூக்ஷ்மமாக (சுருக்கமாக) அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, காலக்ஷேபத்திற்கு வேண்டிய விஷயங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு நேராக சாப்பிட உட்கார்ந்துவிட்டார். அப்பொழுது அவருடைய பத்னி, ''இன்று நீங்கள் பெருமாளுக்கு செய்யவேண்டிய நித்ய ஆராதனமே செய்யவில்லையே'' என்று கூறினாள். உடனே அவர் தன்னுடைய திருவாராதன பெருமாளை சமையல் செய்த இடத்திற்கு அழைத்து வந்து, அப்படியே அமுது செய்து வைத்தார்.

இதையெல்லாம் கவனித்து வந்த அவனுக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. அவன், அவரை நமஸ்கரித்து, வினயத்துடன்,

''ஸ்வாமி ! எனக்கு மட்டும் இவ்வளவு கடினமான அனுஷ்டானங்களை உபதேசித்தீர்கள். நானும் அவைகளை மிகவும் சிரத்தையுடன் அனுஷ்டித்துப் பார்த்தேன். எனக்கு போதும் போதும் என்றாகிவிட்டது. தாங்கள் எப்படி அனுஷ்டானம் செய்கிறீர்கள் என்பதைப் பார்க்கத்தான் தங்களுடன் வந்து ஒரு நாள் தங்கியிருந்தேன். ஆனால், தாங்களோ எனக்கு உபதேசித்தபடி அனுஷ்டானங்களைச் செய்யவில்லை. எல்லாவற்றையும் மிகவும் ஸுஷ்கமாக செய்து வருகின்றீர்களே, எனக்கு இது மிகவும் வியப்பை அளிக்கின்றது. தாங்கள் எனக்கு உபதேசிப்பதை அனுஷ்டானத்தில் வைத்துக் கொள்ள வேண்டாமா?'' என்றான்.

அதற்கு அவரோ ஒரே வார்த்தையில், ''எனக்கு நான் செய்து வருகின்ற அனுஷ்டானங்களே அதிகம். ஆனால், உனக்கு நான் உபதேசித்தது கூட போதாது'' என்றார்.



விஸ்வாமித்ரன் தயரதனிடம் இராமனை யாசித்தல்

# உவமைக்கோர் கம்பநாட்டாழ்வார்

கம்பராமாயணத்தில், பாலகாண்டத்தில், தான் நடத்த இருக்கும் வேள்வியை காப்பதற்காக, விச்வாமித்திர முனிவன், தயரதனிடம் இராமரைத் தன்னுடன் அனுப்பி வைக்குமாறு கேட்கிறான். அப்பொழுது விச்வாமித்திரன், தான் செய்ய இருக்கும் வேள்விக்கு சுபாகு, மாரீசன் என்ற இரு அரக்கர்கள் தொல்லைகள் பல தருவதற்கு சித்தமாயுள்ளார்கள் என்பதையும், அவர்களுடைய இடையூறு இல்லாமல் வேள்வியை நடத்தி முடிப்பதற்காகவே, இராமரை தன்னுடன் அனுப்பி வைக்குமாறு கேட்கிறேன் என்பதையும் கூறும் கட்டத்தில் கம்பன், மிகவும் அழகான ஒரு உதாரணத்தை கையாள்கிறான்.

''கருநாள் தொடங்கி கரிநாள் எல்லாம் காமம், வெகுளி, என்னும் கழிபெருங்குப்பை'' என்று பட்டினத்தார் குறிப்பிடுவது போல், ஒவ்வொரு ஜீவனையும் கருவிலிருந்த நாள் முதல் மரணம் வரை காமமும், வெகுளியும் (கோபம்) படாதபாடுபடுத்துவது என்பது உண்மை. ஒவ்வொரு ஜீவனுக்குமே, காமத்தையும், கோபத்தையும் அடக்கியாள வேண்டியது அவசியமாயினும், தவமியற்றுபவர்களுக்கு இது இன்றியமையாதது ஆகும். ஏனென்றால், காமமும், கோபமும் அடங்காதவர்களுக்கு தவம் கைகூடவே கூடாது.

பொதுவாகவே, தவம் செய்ய முயலுபவர்கள் காமத்தையும், கோபத்தையும் அடக்கி வைத்திருப்பர். ஆயினும், இவ்விஷயத்தில் அவர்கள் எத்துனை ஜாக்கிரதையாக இருப்பினும், அவர்கள் இயற்றும் தவத்திற்கு இடையூறாக காமமும், கோபமும் அவர்களிடம் வெளிப்படும்பொழுது, அது அவர்களை படாதபாடு படுத்தும். இது தவமியற்றுபவர்களுக்கே புரியக்கூடிய ஒன்று. இதை நன்கு அறிந்திருந்த கம்பன், இந்த உதாரணத்தை இங்கு கையாள்கிறான்.

*'தருவனத்துள் யான் இயற்றும் தகை வேள்விக்கு*
*இடையூறா, தவம் செய்வோர்கள்*

*வெருவரச் சென்று அடை காம வெகுளி என,*
*நிருதர் இடை விலக்கா வண்ணம்''*

என்று விச்வாமித்திரன் இயற்றும் வேள்வியை, தவமுயல்வோரின் தவத்திற்கு ஒப்பிடுகிறான்.

விச்வாமித்திரனும் முனிவர், தவமுயல்வோரும் முனிவர்களே. காமமும், கோபமும் மனதின் அசுர ஸ்வபாவங்கள். அவை எவ்வகையிலாவது தவத்தை கெடுக்க முயல்கின்றன. இங்கு சுபாகுவும், மாரீசனும் ப்ரத்யக்ஷ அரக்கர்கள். அவர்களும் எவ்வகையிலாவது விச்வாமித்திரன் செய்யும் வேள்வியை கெடுக்க முயல்கின்றனர்.

தவமும் ஒரு வேள்வியே என்பதால், விச்வாமித்திரன் செய்யும் வேள்வியை தவத்தோடு ஒப்பிடுவது மிகச் சரியாக இருக்கிறது. மேலும், தவமுயல்வோர் மனதில் மறைந்திருக்கும் காமமும், கோபமும், எப்பொழுது வெளிப்படும் என்று தெரியாது. அது போலவே, சுபாகுவும், மாரீசனும், எப்பொழுது வருவர் என்று தெரியாது. காமமும், கோபமும் எங்கு மறைந்துள்ளது என்று தவமியற்றுவோர் அறியார். அது போலவே, விச்வாமித்திரனுக்கும், சுபாகுவும், மாரீசனும் எங்கு மறைந்துள்ளனர் என்று தெரியாது.

காமத்தையும், கோபத்தையும் தலையெடுத்தவுடன் அடக்கிவிட வேண்டும். இல்லையெனில், தவத்தை அவை அழித்துவிடும். அதுபோலவே, அரக்கர்களிடமிருந்து வேள்வியை காக்க, அரக்கர்களை அழிக்க வேண்டும்.

தவமழிந்தால், தவமுயல்வோரின் முயற்சி அனைத்தும் வீணாகும். அவர்களுக்கு வேண்டிய பலன் கிட்டாது. வேள்வி நின்றுவிடும். அதுபோலவே, விச்வாமித்திரனின் வேள்வி கலைந்தால், முனிவருக்கு வேள்வியால் வரும் பலன் கூடாது. வேள்விக்காக செய்த முயற்சிகளும் வீணாகிவிடும்.

மேற்கூறிய காரணங்களினால், தவமுயல்வோர் காம, கோபங்களிடம் மிகுந்த ஜாக்கிரதையுடனும், பயந்தவாறுமிருப்பர். விச்வாமித்திரனும் வேள்வி கலைந்துவிடப் போகிறதே என்று சுபாகுவிடமும், மாரீசனிடமும் பயப்படுகிறான். தவமுயல்வோர்,

இறைவனை துணைக்கொண்டால்தான், அவர்களால் காமத்தையும், கோபத்தையும் வெல்ல முடியும். இல்லாவிடில் அது நடக்காது. அதுபோல், இராமனை துணைக்கொண்டால்தான், விச்வாமித்திரனால் சுபாகு, மாரீசனிடமிருந்து வேள்வியை காப்பாற்ற முடியும். இதையே ''தவம் செய்வோர்கள் வெருவரச் சென்று அடை காம, வெகுளி என'' எனும் அழகான உதாரணமாக எடுத்து கையாண்டுள்ளான் கம்பன்.

# உத்தவனுக்கு ஸ்ரீ க்ருஷ்ணனின் உபதேசம்

**- சென்ற இதழ் தொடர்ச்சி**

உத்தவன் : எது தக்ஷிணை?

ஸ்ரீ க்ருஷ்ணன் : ஞானத்தை உபதேசிப்பதே தக்ஷிணையாகும். (வெறும் பணமோ, தங்கத்தையோ கொடுப்பது சிறந்த தக்ஷிணையாகாது.)

உத்தவன் : முட்டாள் யார்?

ஸ்ரீ க்ருஷ்ணன் : தேஹமே தான் என்று கருதி இந்திரிய சுகங்களையே அனுபவிப்பவன் முட்டாள்.

உத்தவன் : எது வழி?

ஸ்ரீ க்ருஷ்ணன் : என்னை அடைவிப்பது எதுவோ அதுவே வழி.

உத்தவன் : எது தவறான வழி?

ஸ்ரீ க்ருஷ்ணன் : மனதில் ஏற்பட்ட கலக்கத்தினால் ஸம்ஸார சுகத்தை அடையச் செல்வதே தவறான வழி.

உத்தவன் : எது ஸ்வர்க்கம்?

ஸ்ரீ க்ருஷ்ணன் : நல்ல புத்தி உண்டானால் அதுவே ஸ்வர்க்கமாகும்.

உத்தவன் : நரகம் எது?

ஸ்ரீ க்ருஷ்ணன் : தமோகுணத்தின் (சோம்பேறித்தனத்தின்) வளர்ச்சியே நரகமாகும்.

(தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை - 48

ஒரு ஊரில் ஒரு பணக்காரன் வாழ்ந்து வந்தான். அவன் மஹா கருமி. ஊரில் உள்ள ஏழைகள் அனைவரும் பலமுறை அவனிடம் வந்து திரவ்யத்திற்காகவோ, வேறு ஏதோ ஒரு ஸஹாயத்திற்காகவோ நாடுவர். அவர்கள் அனைவரையும் இந்த செல்வந்தன், சிறிது கூட இரக்கம் காட்டாது, ஏதும் உதவி செய்யாமல் அனுப்பி விடுவான். வாய் வார்த்தையாலும், கூட அவர்களுக்காக அனுதாபப்பட்டு பேசமாட்டான். மாறாக, தன்னிடம் வரும் ஏழைகளை கூசாமல் ஏசுவான் அவன்.

ஒரு ஸமயம், அந்த ஊரில் பல மாதங்களாக, மழை இன்றி, விளைச்சல் அனைத்தும் குறைந்து போய், கடும் பஞ்சம் வந்தது. ஊரில் உள்ள அனைவரும் உணவிற்கே மிகவும் கஷ்டப்பட்டனர். இந்த பணக்காரனுக்கோ, சொந்தமாக நிலபுலன்கள் நிறைய இருந்தன. அவற்றிலிருந்து வந்த விளைச்சலை அவன் ஒருவனே அனுபவித்ததால், ஏராளமாக தானியம் அவனுக்கு மிகுதியாய் இருந்தது. வழக்கமாய், பிரதி வருடம், அதிகப்படியான தான்ய விளைச்சலை வேற்றூரில் அந்த பணக்காரன் விற்று விடுவான். இம்முறையும், அதுபோலவே செய்ய முற்பட்டான். அச்சமயம், அந்த ஊரில் உள்ள அனைவரும் அவனிடம் வந்து, ''ஐயா! இந்த தான்ய விளைச்சலை எங்களுக்கு பகிர்ந்து கொடுங்கள். எங்களுக்கு இந்த வருடம் போதிய உணவிற்கான தானியம் கூட இல்லை. தயவு செய்து உதவி செய்யும்'' என்றனர். அந்த பணக்காரனோ, அவர்கள் சொல்வதை லட்சியம் செய்யாது, தானியங்களை விற்றுவிட்டான்.

சிறிது காலம் கழித்து, அந்த பணக்காரனுக்கு ஒரு கடுமையான வயிற்றுவலி வந்தது. பல வித வைத்தியங்களை செய்து பார்த்தும், அவனுக்கு அந்நோய் விலகவில்லை. குறைந்தபாடுமில்லை. அவன் மிகுந்த கவலைக்குள்ளானான். அதே ஸமயம், அந்த ஊருக்கு ஒரு மஹாத்மா வந்தார். ஊரில் உள்ள அனைவரும், அவரைச் சென்று வரவேற்று, உபசரித்தனர். அவரிடம், தங்களுக்கு பஞ்சத்தினால் வந்த கஷ்டத்தை பற்றியும், சக்தியிருந்தும் சிறிதும் கூட

உதவிசெய்யாத அந்த பணக்காரனைப் பற்றியும் சொன்னார்கள். அந்த மஹாத்மா அதை பொறுமையுடன் கேட்டுக்கொண்டார்.

ஊருக்கு ஒரு மஹாத்மா வந்ததை கேள்விப்பட்ட செல்வந்தன் தனது நோயை, அந்த மஹாத்மாவிடம் சொல்லி போக்கிக் கொள்ளலாமே எனும் நோக்கத்துடன் வந்தான். அதுபடியே, மஹாத்மாவிடம் தனது கஷ்டத்தைச் சொல்லவும் செய்தான்.

கருணையுடன் அந்த மஹாத்மா அவனிடம், ''உனது இந்த நோய் சீக்கிரம் விலகிவிடும். ஆனால், ஒரு நிபந்தனை. 45 நாட்கள் நீ வெறும் கஞ்சி மட்டுமே அருந்த வேண்டும்'' என்று சொன்னார். அவர் வார்த்தை மேல் நம்பிக்கையுடன், அந்த செல்வந்தனும் திரும்பிச் சென்றான்.

வீட்டுக்கு திரும்பி வந்ததிலிருந்து, அவன் ஆஹார நியமத்தோடு, கஞ்சி மட்டுமே அருந்தி வந்தான். ஓரிருநாட்களிலேயே, அவனை பசி மிக வாட்டியது. ஒரு மாதத்திற்குள்ளாகவே, அவன் ஆஹாரமில்லாமல் தவிக்கும் ஏழை ஜனங்களின் கஷ்டம் என்ன என்பதை நன்கு புரிந்து கொண்டான். 45 நாட்களுக்குள் அவன் மனது மேலும் மாறி, ஏழைகளிடம் அவனுக்கு இரக்கமேற்பட்டு, அவர்களுக்கு தன்னிடமிருந்து தானியத்தையும், செல்வத்தையும் வாரி வழங்கினான். மஹாத்மாவின் சொல்படி செல்வந்தனின் நோயும் நீங்கியது. ஜனங்களின் கஷ்டமும் தீர்ந்தது.

ஆகவே, குழந்தைகளே! எந்த கஷ்டமும் தனக்கு வந்தால்தான் புரியும் என்பது இந்த கதையிலிருந்து நமக்கு தெரிகின்றது அல்லவா!

---

ஒரு ஸாதகனுக்கு பணம், தேஹ ஆரோக்கியம், வசதிகள், புகழ் என்று எல்லா சௌகர்யங்களிருந்தாலும், அவனால் காமம், கோபம், பயம் போன்ற தனது துர்குணங்களை வெல்ல முடியாவிடின், அவனுக்கு மேற்சொன்னவைகளினால் திருப்தி ஏற்படாது. புலன்களை அடக்குவதிலும், துர்க்குணங்களை வெல்வதிலுமே ஒரு ஸாதகன் குறியாயிருப்பான். வெளிவிஷயங்களினால் உண்மையான ஸாதகன் சந்தோஷம் அடைய மாட்டான். - **ஸ்ரீ ஸ்வாமிகள்**

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 6

**தொடர்ச்சி**

அந்தப் பெண்மணி மறுபடி அவரை பிக்ஷை ஏற்கச் சொல்லி உரக்கக் கூவியதும் மெதுவாக நினைவு பெற்று, ''அம்மா! மாதுகரி இருக்கட்டும். எனக்கு உன் குழந்தைகளின் தட்டிலிருந்து சிறிது அன்னம் தாயேன்'' என்று கெஞ்சினார். அதற்கு அவள், ''என்ன பாபா! குழந்தைகளின் எச்சில் சோறு வேண்டுமா? அதுவும் நாங்கள் கெஞ்சினாலும் சமைத்த நல்ல உணவையே வேண்டாம் என்று நீங்கள் சொல்வீரே! இன்று இப்படி எச்சில் உணவை கேட்கிறீரே! உமக்கு என்ன பைத்தியமா? என்றாள். அவள் பாவம்! உள்ளே சென்று வருவதற்குள் நந்தலாலாவின் மாயையால் நாவல்கிஷோரின் நிலைமை தலைகீழாக மாறிவிட்டதை அவள் எப்படி அறிவாள்!

சமைத்த உணவு ப்ரஸாதமானாலும் ஏற்காத பாபா, தன் உணவில் பிறரது நிழல் கூட பட விடாத பாபா, இன்று வ்ரஜராஜன், உணவுப் பொருட்களின் கந்தத்தைவிட ஹ்ருதயத்தின் ப்ரேமையைதான் அதிகம் விரும்புகிறான் என்று தெரிந்துகொண்டு விட்டார். நியமத்தைவிட ப்ரேமையை விரும்புபவன்தான் நந்தகுமாரன் என உணர்ந்து கொண்ட நாவல்கிஷோர், ''அம்மா நான் பைத்தியமாகவில்லை! என் பைத்தியம் இன்றுதான் தெளிந்தது! நேரம் தாழ்த்தாமல் எனக்கு அன்னமிடு'' என்றார். பாபாவின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது - குரல் தழுதழுத்தது. அந்தப் பெண் ஒன்றும் புரியாமல் குழந்தைகளின் தட்டிலிருந்து எச்சில் அன்னத்தை பாபாவுக்கு அளித்தாள். அவள் பார்க்கும் பொழுதே, அவர் அந்த உணவை அநிர்வசனீயமான ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டு உண்டார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பாபாவின் மனதில் எண்ண அலைகள் மோதின. நானும் இன்றுவரை விஷ்ணுவை ஶ்ரத்தையாகத்தானே உபாசித்து வருகிறேன். ஆனால் அவர் ஒரு முறை கூட எனக்கு தர்சனம் தரவில்லை. ஆனால், இந்த வ்ரஜத்தின் டாகுரான நந்தலால், நான் யாசிக்காமலேயே இப்படிக் க்ருபை செய்து விட்டானே! எப்பேர்ப்பட்ட க்ருபாளு! எப்படி கபடமே இல்லாமல் சிரிக்கிறான்! விஷ்ணுவின் உபாசனையில் எத்தனை மரியாதை நியமங்கள்! இவனைப் பார்த்தாலே நெஞ்சில் அணைத்துக்கொண்டு கண்ணீரால்

அபிஷேகம் செய்துகொண்டே இருக்கவேண்டும் போல் இருக்கிறதே! மஹாவிஷ்ணு சிம்மாசனத்தில் மரியாதை புருஷனாக அமர்ந்து நைவேத்தியத்தை ஏற்றுக்கொண்டு ப்ரஸாதத்தை பக்தர்களுக்கே தந்துவிடுகிறான். ஆனால், கண்ணன் இப்படி வ்ரஜபூமியில் வீடுவீடாக அலைந்து திரிந்து வ்ரஜவாஸிகளின் உச்சிஷ்டத்தை உண்டு ஆனந்திக்கிறானே!'' என்று வியந்தார்.

இப்படிப்பட்ட அனுபவத்தால் பாபா விஷ்ணுவை முன்போல் ஆராதித்தாலும், சிந்தனையெல்லம் நந்தலாலாவிற்கே அர்ப்பணித்தார். த்யானம் முழுவதும் நந்தலாலாதான்! ஒருநாள் கோவிலில் அமர்ந்து த்யானம் செய்கையில் நந்தலாலா தன் முட்டியால் தவழ்வதையும் அடிக்கடி தன் முட்டியை தடவிக் கொள்வதையும் கண்டார். அன்று அவர் கனவிலும் நந்தலாலா வந்து அவரிடம் ''பாபா! என் முட்டியெல்லாம் சிராய்த்துவிட்டது'' என்றான். பாபாவின் மனம் இதைக் கேட்டு உருகியது. கண்ணன் படும் கஷ்டம் அவருக்குத் தாளவில்லை. என்ன ஆனாலும் சரி, கோவிலுக்கு பளிங்குக் கற்களால் தரை ஏற்படுத்த வேண்டும் என நிச்சயித்தார்.

அடுத்த நாள் காலையில் அவர் ஜோத்பூருக்குச் சென்று அங்கு ஒரு பளிங்கு கற்கள் வியாபாரம் செய்பவரைக் கண்டுபிடித்து அவரிடம் நந்தலாலாவின் கோவிலுக்கு தரை அமைக்க பளிங்குக் கற்கள் தருமாறு யாசித்தார். அந்த வியாபாரி, ''பாபா! எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லுங்கள். உங்களை இங்கு அனுப்பிய நந்தலாலா நேற்று என் கனவிலும் வந்து உங்களுக்கு கற்கள் தருமாறு ஆணை இட்டான்'' என்று சிரித்துக்கொண்டே சொன்னான்.

அப்போது ஜோத்பூரிலிருந்து மதுராவிற்கு ரயில் வசதி கிடையாது. மாட்டு வண்டியில் கற்களை ஏற்றி அனுப்பி கோவிலுக்கு அழகாக தரை அமைக்கப்பட்டது. வாயிலில் பளிங்கினாலேயே ஒரு விதானமும் அமைத்து ஜகன் மோஹனன் அதன் கீழே எழுந்தருளி செய்யப்பட்டான். இன்றும் அந்த கோயில் அங்குள்ளது. இந்த நிகழ்ச்சியை கற்சுவரில் கவிதையாக செதுக்கி உள்ளார்கள்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# உலக ஒற்றுமைக்கு வழி வகுக்கும் வேதங்கள்

– புலியூர். க. ராகவசர்மா, புலியூர். க. சங்கரசர்மா,
கும்பகோணம் M.S. ஸ்வாமிநாதன் சர்மா

**(National Integration)**

*ஸ்ரீஸ்ரீ சந்த்ரிகா நந்த நாத திவ்ய சரணாரவிந்தம் சரணம் வ்ரஜாமி*

புண்ய தேவயஜனமான இந்த பாரத புண்ய பூமியின் க்ஷேமத்திற்கும், லோக க்ஷேமத்திற்கும் அம்ருத மயமான வேதங்கள் எவ்வாறு வழிவகுக்கிறது என்பதைப் பார்ப்போம்.

முதலில் ரிக் வேத ஸம்வனன ஸூக்தத்தில்

संगच्छध्वं संवदध्वं संवो मनांसि जानताम् ।।

ஒற்றுமையாக செயல்படுங்கள். ஒருமித்த கருத்துடன் பேசுங்கள். உங்கள் மனங்கள் ஒருமித்த கருத்தையே பின்பற்றட்டும். என்று ஸமுதாய ஒற்றுமைக்கு வழிவகுக்கும் விதமாக போதிக்கிறது.

समानो मन्त्रस्समितिस्समानी समानं मनस्सह चित्तमेषाम् ।।

உங்கள் ப்ரார்த்தனை ஸர்வ ஜன க்ஷேமத்திற்காக ஒருமனதுடன் விளங்கட்டும். உங்கள் ஸமிதி கூட்டங்கள் ஒற்றுமையுடன் நிலவட்டும்.

समानीव आकूतिः समाना हृदयानि वः
समानमस्तु वो मनो यथा वस्सुसहासति ।।

உங்கள் ஸங்கல்பமும் உங்கள் உணர்ச்சியும், உங்கள் சிந்தனையும் ஒன்றுபட்ட உள்ளங்களுடன் ஸமுதாய ஒற்றுமைக்கு வழிவகுப்பதாக இருக்கட்டும் என்று ஸர்வ ஜன ஸ்நேக யுக்திக்கு வேதங்கள் அற்புதமான போதனைகளைக் கூறுகிறது. இந்த மதுர ரஸமான போதனைகள் யாவும் ஸர்வ வர்ணத்தாருக்கும் கூறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதை Maxmuller (மேக்ஸ்முல்லர்) போன்ற மேற்றிசை அறிஞர்கள் (Westerm Vedic Scholars) ஊர்ஜிதப்படுத்தி ப்ரதர்சிக்கின்றனர்.

இதைப் பற்றி அதர்வண வேத ஸம்மனஸ்ய ஸூக்தத்தில் மிகவும் அழகாக ப்ரஸ்தாபிக்கிறது.

सहृदयं साम्मनस्यमविद्वेषं कृणोमि वः ।
अन्यो अन्योममिहर्यत वत्सं जातमिवघ्न्या ॥

புதிதாகப் பிறந்த கன்றினை அதனுடைய மாதா எவ்வாறு ப்ரேமையுடனும் வாஞ்சையுடனும் நேசிப்பாளோ அதே போன்று உங்களை ஒரே உள்ளம், மனதுடையவர்களாகவும் பரஸ்பரம் ஸ்நேக **பா**வங்களுடன் வெறுப்பு அற்றவர்களாகவும் ஆக்குகிறேன் என்று கூறுவதாக அமைந்துள்ளது.

மற்றும் ஸர்வ வர்ண ஸமபாவத்தையும் தீண்டாமையற்ற மனித ஸமுதாயத்தையும் உருவாக்க வேதங்கள் எவ்வாறு வழிவகுக்கிறது என்பதற்கு கீழ்காணும் வரிகளே சரியான உதாஹரணமாகும். எவ்வாறெனில்,

समानी प्रपा सह वोन्नभागः समाने योक्रे सहवो युनज्मि ॥

கிணறுகள், ஸமையலறைகள் இவை யாவும் உங்கள் யாவர்க்கும் பொதுவாக இருக்கும் அளவுக்கு நீங்கள் ஒற்றுமையை வளருங்கள் என்று ஸர்வ வர்ண ஸமத்வத்தை வலியுறுத்துகிறது.

अज्येष्ठासो अकनिष्ठास एते सं भ्रातरो वावृतुः सौभाग्याय ॥

நம்மில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற எண்ணத்தை மறந்து நாம் அனைவரும் சகோதரர்கள் என்பதைப் புரிந்துகொண்டு சந்தோஷமாக வாழ்வோமாக! என்றும் யஜுர் வேதத்தில்

अन्यावो अन्यामवत्वन्यान्यस्या उपा वत ॥

ஒருவன் மற்றொருவனுக்கு பரஸ்பர பரோபகாரங்களுடன் இனிதே வாழ்வோமாக என்றும் அதர்வண வேதத்தில்

यं यञ्चः सव्रता भूत्वा वाचं वदत भद्रया ॥

நாம் யாவரும் ஒன்றாக இணைந்து ஒரே நோக்கத்துடன் இணைந்து செயல்படுவோமாக! என்று இதர வர்ணத்தாரையும் இணைத்து தேசிய ஒற்றுமைக்கு (National Integration) வழிவகுக்கிறது. வேதங்கள் எந்தளவிற்கு லோக ஒற்றுமைக்கு பாதை அமைக்கிறது என்பதற்கு இதைவிட உதாஹரணங்கள் கிடையாது. இப்போதைய லோகாயத வீனர்களின் அபவாதத்திற்கு இதைவிட சரியான பதில் கிடையாது.

योग क्षेमोनः कल्पतामित्याह कल्पते ह वै तत्र प्रजाभ्यो योग क्षेमः ॥

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து

'தியானத்தில் சமாதி ஆனந்தம், கலைந்தால் அது விலகிவிடுகிறது' என்னும் ஒரு நிலை. பூரணமான நிலை அல்ல. தியானம் செய்தாலும், செய்யாவிட்டாலும், இந்த ஆனந்தம் தொடர்ந்து இருக்க வேண்டும். அது மனது முழுவதுமாக அழிந்தால்தான் ஏற்படும். இப்படி ஸதா, ஸர்வகாலமும் மனது அழிந்து, ஆத்மானந்தத்தில் இருப்பதற்குத்தான், ஸஹஜ ஸமாதி என்று பெயர். இதுவே உயர்ந்த நிலை. இதன் பின், இந்த ஆனந்தம் கூடாது, குறையாது. வெளிவிவகாரங்களில் ஈடுபட்டால், விலகாது. ஸதாஸர்வகாலமும் இருக்கும்.

இப்படிப்பட்ட உயர்ந்த ஆத்மஸ்வரூபத்தை, அடைவதற்கு பாடுபடாமல், (ஞமலியிற் கேடாய் நாய் எப்படி மோப்பம் பிடிக்கிறதோ, அது போல் ஆத்ம விசாரம் செய்து) உலகில் வாழ்கிறேன். அருணாசலா, உன்னை அடைந்து, இந்த ஆத்மானந்தத்தை நான் பெற மாட்டேனா என்கிறார் ரமண பகவான்.

*''ஞானமில்லாது உன் ஆசையாற் தளர்வற*
*ஞானம் தெரித்தருள் அருணாசலா''*

இந்த அக்ஷரமணமாலையின் உபன்யாசத்தைக் கேட்ட அனைவருக்கும் மோக்ஷத்தில் ஆசை வரும். இதுபோல் யோக மார்க்கம் பற்றி சொன்னால், பெரும்பாலான ஜனங்களுக்கு அதில் ஆசை வரும்.

''உள்ளுக்குள் சுஷும்னா என்று ஒரு நாடி உள்ளது. அதற்குப் பக்கத்தில் இடகலை, பிங்கலை என்று இரு நாடிகள் ஓடுகிறது. நாடி சுத்தி என்று ஒரு ஸாதனை யோகமார்க்கத்தில் உண்டு. அந்த நாடி சுத்தியையும், ப்ராணாயாமங்களையும் செய்வதினால், மூலாதாரத்தில் உள்ள ப்ராணசக்தி மேல் நோக்கி கிளம்புகிறது. இப்படி கிளம்பிய ப்ராணசக்தி, மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், அனாஹதம், விஶுத்தி,

ஆஜ்ஞா, ஸஹஸ்ராரம் என்ற சக்கரங்களை அடையும்பொழுது ஆச்சரியமான காட்சிகளும், அனுபவங்களும் ஏற்படும்'' என்று சொன்னால், அநேகமாய் எல்லோருக்கும் இதில் ஆசை வருகிறது.

இதுபோல் பக்தியைப் பற்றி கேட்டாலும், ஆசை வரும். ஒரு பக்தர் பகவானுக்காக கதறி அழுதிருக்கிறார். ஒரு பக்தர் பகவானை நேரில் பார்த்து பேசியிருக்கிறார். ஒரு பக்தருக்காக பகவான் அழகான ஒரு லீலையை அனுக்ரஹம் செய்துள்ளான் என்றெல்லாம் கேட்டால், பக்தியிலும் ஆசை வரத்தான் செய்கிறது. வேதாந்தத்தைப் பற்றி உபன்யாசம் கேட்டால், இந்த ஜீவன் முக்தி எனும் ஸ்திதியை அடைந்துவிட்டால், மறுபிறவியே கிடையாது என்றால், அதிலும் ஆசை வருகிறது.

இவ்வாறு பகவானைப் பற்றியும், யோகசாதனைகளைப் பற்றியும், ஜீவன் முக்தி பற்றியும் கேள்விப்பட்டால் எல்லோருக்கும் அந்த அந்த அனுபவத்தைப் பெற வேண்டும் என்கிற ஆசை வருகிறது. ஆனால், யாரும் முயற்சி செய்வதில்லை.

ஒரு சிறுவன் பள்ளிக்குச் செல்கிறான். படிப்பதில் தனக்கு ஆர்வமுள்ளதாக சொல்கிறான். மேல்படிப்பு நிறைய படிக்க வேண்டும் என்று ஆசை கொள்கிறான். ஆனால், அவன் படிப்பதற்கு எந்தவித முயற்சியும் எடுக்காமலிருந்தால், எப்படி அவனுடைய ஆசை வீண் ஆசையாகுமோ, அதுபோலவே ஒருவர் ஆத்மஸாக்ஷாத்காரத்திற்கும், பகவத் அனுபவங்களுக்கும் ஆசைப்படுவதும், ஆனால் அதற்கு எந்தவித முயற்சியும் எடுக்காமலிருப்பதும் ஆகும்.

மேலும், இது வெகுஜனங்களை பற்றினதான விஷயம். ராஜயோகம் பயிலும் யோகிகள் ப்ராணசக்தி ஸஹஸ்ராரத்தில் போய்ச் சேருவதையே தங்கள் அனுபவத்தின் முடிவாக, சொல்கின்றனர். ஆனால், ஹ்ருதயத்தில் பரமாத்மாவின் தரிசனம் பெறுவதே இவ்வாறு யோகிகள் சொல்வதற்கும் மேலான மற்றும் இறுதியான நிலை என்கிறார் பகவான்.

(தொடரும்)